**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 53/2023**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 நல்லம்மாள் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) கிரையம் யாரிடம் வாங்கினேன் என்றால் பூங்கோதையிடம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.527/1 ஆகும். நான் எவ்வளவு இடத்தை கிரையம் வாங்கினேன் என்றால் தெரியவில்லை. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு மூல ஆவணங்களை பார்த்து தான் கிரையம் வாங்கினேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.5 ஆவணம் தான் எனது கிரைய சொத்தின் மூல ஆவணம் என்றால் தெரியவில்லை. மேற்படி ஆவணத்திலேயே வழிநடை வண்டிபாதை உள்ளது என்றால் சரியல்ல. எனது இடம் வடக்கிலும், தெற்கிலும் உள்ளது என்றால் சரிதான்.

2) வாதிகளின் இடமும், எனது நிலத்தில் கிழபுறம் வடக்கிலும், தெற்கிலும் உள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. வடபுறமும், தென்புறமும் உள்ள நிலத்திற்கு நடுவில் தான் வண்டிபாதை செல்கிறது என்றால் சரியல்ல. வாதிகள் மீதுள்ள காழ்புணர்ச்சி காரணமாக நான் மேற்படி வண்டிப்பாதையை தடுக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு மேற்படி பாதையை தவிர வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல. தென்புறமாக உள்ளது. எனக்கு இடையூறு கொடுக்கவே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனது நிலத்திற்கு செல்ல பாதை உள்ளதா என்றால் எனது நிலத்தை ஒட்டி ரோடே இருக்கிறது.

3) ரோட்டிலிருந்து எனது நிலத்திற்கு பாதை செல்கிறதா என்றால் இல்லை. நான் ஜெகதாபி கிராமம். வாதிகள் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் தெரியாது. எனது நிலம் வரவணை, பண்ணைப்பட்டி இரண்டு கிராமத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பண்ணைப்பட்டி கிராமத்தில் மட்டும் தான் உள்ளது. எனது நிலத்தில் விவசாயம் செய்கிறேனா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கியதிலிருந்து விவசாயம் செய்யவில்லையா என்றால் ஆமாம். நான் எனது நிலத்திற்கு அடிக்கடி செல்வேனா என்றால் என் கணவர் செல்வார். எனது நிலத்திற்குண்டான பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் கணவருக்கு தான் தெரியும்.

4) நான் தாவா சொத்திற்கே செல்லாததால் அதில் பாதை இருக்கிறதா இல்லையா எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் சென்று வரும் பாதையில் நான் குழி பறித்து பாதையை தடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் குழி பறித்ததற்காக எனக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணத்தின் சொத்தில் மூல ஆவணத்திலேயே வண்டிப்பாதை உள்ளது என்றும், அதை வாதிகள் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் அதை தடுத்து வாதிகளுக்கு இடையூறு கொடுக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள குழியை நான் தான் பறித்தேன் என்றால் சரியல்ல.

5) 1ம் வாதி அருக்காணி அம்மாளிடம் இருந்து கிரையம் வாங்கிய போது அதில் நான்குபுற எல்லையில் வழித்தடம் கண்டுள்ளது என்றால் சரியல்ல. 2,3 வாதிகளின் தகப்பனார் கிரையம் வாங்கிய போது அதில் வழித்தடம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வாதிகளின் வழித்தடத்தை தடுத்ததாக என்மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு வேறு தடம் இல்லை என்றும் நான் வாதிகள் பயன்படுத்தி வரும் பாதையை தடை செய்கிறேன் என்றால் சரியல்ல.

6) நீதிமன்ற ஆணையர் மூலமாக தாவா சொத்தை பார்வையிட்டால் பாதை உள்ள விபரம் தெரியும் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தற்போது தாவா சொத்தை பார்வையிட எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் தாவா சொத்தில் பாதையே இல்லை. உண்மையில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டால் பாதை உள்ள விபரம் தெரிந்து விடும் என்பதால் தான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7) நான் கிரையம் வாங்கியது முதல் நான் எனது கிரைய சொத்திற்கு சென்றதில்லை என்றும் எனவே அது வழித்தடம் உள்ளதா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கடைசியாக நான் எப்போது தாவா சொத்திற்கு சென்றேன் என்றால் 3,4 வருடங்கள் ஆகிறது. அதற்கு முன்பு தாவா சொத்திற்கு நான் செல்லவில்லை என்றால் தேவை என்றால் செல்வேன். எனக்கும், வாதிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சனையால் தான் வாதிகள் பயன்படுத்தி வரும் வழித்தடத்தை மறைத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

8) நான் கிரையம் வாங்கிய பூங்கோதையும், அவரது கிரைய தாரரும் மேற்படி பாதையை தான் காலம் காலமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு மேற்படி பாதையை தவிர வேறு பாதை இல்லை என்றும், அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே வாதிகள் கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/–R. தமிழரசி**
**Principal District Munsif,**
**Kulithalai.**